அசல் வழக்கு எண். 118/2014 தேதி 14-02-2024

வா.சா.1- பிச்சைமுத்து

3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 2ம் வாதி சௌந்திரபாண்டியன் எனது தம்பி. 1 முதல் 4 பிரதிவாதிகள் எனது உறவினர்கள் இல்லை. பாதைக்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பாதை சர்வே எண்.690 ல் உள்ளது. 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு சர்வே எண் 690 சொந்தமானதாகும். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் மற்றும் அவரது தந்தை சர்வே எண்.690 ல் சுமார் 60 ஆண்டு காலமாக இருந்து வருகிறார்கள். மேற்படி சர்வே எண்.690 ற்கு தென்புறம் சர்வே எண்.691 உள்ளது. மேல்புறம் உள்ள சர்வே எண் தெரியவில்லை. மேல்புறம்உள்ள இடம் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது. அதன் சர்வே எண்.683 என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.690 ற்கு வடபுறம் மண்ரோடு உள்ளது. மேற்படி மண்ரோட்டிலிருந்து 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தங்கள் சொத்திற்கு வருவதற்கு பாதை அமைத்துள்ளனர் என்றால் பாதை உள்ளது. ஆனால் யார் அமைத்துள்ளனர் என்று தெரியாது. மேற்படி தென்வடல் பாதை சர்வே எண் 690 ல் முடிவடைகிறது. சர்வே எண்.683 ற்கு தென்புறம் உள்ள சர்வே எண் தெரியவில்லை.

2. 3 மற்றம் 4 பிரதிவாதிகள் இடத்தில் கிணறு உள்ளது. சர்வே எண்.690 ற்கு தென்புறம் சர்வே எண்.691/1 மற்றும் சர்வே எண்.691/4 ஆகியவை எனது இடமாகும். மேற்படி இடம் தாவா A பட்டியல் சொத்தாகும். என் நிலத்திற்கு கிழக்கே 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நிலம் உள்ளது. அதன் சர்வே எண்.691/6 ஆகும். வைரப்பெருமாள் மகன் ராஜலிங்கம் என்பவரிடமிருந்து சர்வே எண்.691 மற்றும் 691/4 ஆகிய சொத்துக்களை 2007 ம் வருடம் கிரையம் பெற்றேன். வா.சா.ஆ-1 ஆவணததில் பாதை குறிப்பிடாமல் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.690 ல் மேல்புறம் உள்ள 15 அடி பாதை குறிப்பிட்டு கிரையம் பெறவில்லை. ஆனால் மாமூல் வழிநடை பாதை என குறிப்பிட்டுள்ளோம். வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி எந்த காலத்திலும் பாதை இருந்தது இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை வைரபெருமாள் மற்றும் ராஜலிங்கம் தந்தை வைரபெருமாள் ஆகியோர் வெவ்வேறு நபர்கள். நான் 2 ¼ ஏக்கர் கிரையம் பெற்றேன். அது மானாவாரி நிலம் ஆகும். மேற்படி சொத்தில் போர் வெல் அமைத்து தென்னை மரங்கள் வைத்துள்ளேன்.

3. வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு போர்வெல்

அமைத்தேன். மேற்படி போர்வெல் தற்போதும் உள்ளது. மின் இணைப்பு பெறவில்லை. ஆயில் இன்ஜின் மூலமாக தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். தற்போது தென்னை மரங்கள் இல்லை. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பாதையை அடைத்து விட்டதால் எனது சொத்துக்குள் போக முடியவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி பாதையை தடுத்துவிட்டார்கள். அது முதல் எனது சொத்து தரிசு நிலமாக தான் உள்ளது. நான் அதன் பின் சொத்திற்கு போகவில்லை. தற்போது மேற்படி சொத்து எனது சுவாதீனத்தில் இல்லை. மேற்படி சொத்து A பட்டியல் சொத்தாகும். எனது சொத்திற்கு மேல்புறம் 6 அடி உயரம் மற்றும் 40 நீளத்தில் கல்கட்டு சுவர் உள்ளது. மேற்படி கல்கட்டு சுவர் பல ஆண்டுகளாக உள்ளது. மேற்படி கல்கட்டு சுவருக்கு நேர் மேற்கே 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மச்சு வீடு உள்ளது.

4. மேற்படி வீடு வடக்கு பார்த்து உள்ளது. மேற்படி 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வீட்டிற்கு வருவதற்கு 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு சொந்தமான பாதை வழியாக வரவேண்டும் என்றால் வேறு பாதை உள்ளது. வேலிக்கு மேல்புறம் உள்ள பாதை வழியாக 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வீட்டிற்கு சென்று வருகின்றனர். 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் வீடு நிலம் மற்றும் கிணறு ஆகியவை தனியாக உள்ளது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் நிலத்திற்கு தென்புறம் பொம்முடி ரெட்டியார் குளம் உள்ளது. மேற்படி குளத்தின் கரை கிழமேல் மற்றும் தென்வடலாக உள்ளது. மேற்படி குளத்தின் கரையில் வாகனங்கள் செல்ல முடியாது. மனிதர்கள் நடந்து செல்லலாம். மேற்படி குளத்ததின் வடகிழக்கு மூலையில் A பட்டியல் சொத்து முடிவடைகிறது என்றால் சரியல்ல. இடையில் வேறு ஒரு சர்வே எண்ணில் உள்ள சொத்து உள்ளது. எனது நிலத்திற்கு தெற்கே சங்கப்பிள்ளை மகன் சதாசிவம் நிலம் உள்ளது. என் நிலத்தை ஒட்டி தென்புறம் திருமலை கொழுந்து நிலம் இல்லை.

5. ஒரு சொத்து தள்ளி மேற்படி நிலம் உள்ளது. சங்கப்பிள்ளை மகன் சதாசிவம் நிலத்தை ஒட்டி குளத்தின் கரை இல்லை. சதாசிவம் அமைத்துள்ள கரையை ஒட்டி மேல்புறம் தென்வடலாக வாரி செல்கிறது. மேற்படி வாரியில் வாகனங்கள் போகாது. சற்று தொலைவில் வாகனங்கள் செல்லும். மேற்படி வாரி குளத்தின் வடக்கே சென்று மேல்புறமாக திரும்பி மீண்டும் தென்புறமாக உள்ளது என்றால் சரியல்ல. எனது இடத்திற்கும் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் இடத்திற்கும் இடையே வேலி உள்ளது. மேற்படி வேலியில் கிழமேலாக மரங்கள் உள்ளது. மேற்படி மரங்களுக்கு வடபுறம் உள்ள 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நிலங்களில் விவசாயம் செய்து வருகின்றனர். 3

மற்றும் 4 பிரதிவாதிகள் நிலத்திலிருந்து எனது நிலமான சர்வே எண்.691/1 மற்றும் சர்வே எண்.691/2 ன் வழியாக சர்வே எண்.691/6 நிலத்திற்கு பைப் லைன் செல்கிறது. மேற்படி பைப் லைன் நான் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பே உள்ளது. சர்வே எண்.690 ல் பாதை உள்ளது என காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பாதையை கிரைய வாங்கவில்லை. பாதை உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. வருவாய் துறை வரைபடத்தில் பாதை உள்ளதாக காண்பிக்கப்படவில்லை. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் கிணற்றின் தெனபுறம் கொட்டகை அமைத்து மாடு கட்டி வருகிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது. திருமலை கொழுந்து இடத்திற்கு தென்புறம் மின் உற்பத்தி செய்யும் காற்றாலை அமைத்துள்ளனர். காற்றாலை அமைப்பதற்கு தேவையான சாதனங்களை காற்றாலை அமைந்துள்ள இடத்தின் தென்புறம் உள்ள பாதை வழியாக எடுத்து வந்தனர். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சொத்தின் மேல்புறம் தென்வடல் பாதை உள்ளது. மேற்படி பாதை குளத்தை சுற்றி வருகிறது. தாவா சொத்துக்களுக்கு எவ்வித பாதை அமைப்பும் இ,ல்லை என்றால் சரியல்ல. தாவா B பட்டியல் பாதை அமைப்பு பூமி அமைப்பில் ஒரு நாளும் இல்லை என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நிலத்தின் மேற்கு பக்கம் வேலி உள்ளது. வடபுறம் வேலி இல்லை. கிழக்கு பக்கம் வேலி உள்ளதா என்று தெரியவில்லை.

7. வா.சா.ஆ.11 பிராது வரைபடம் தவறானது என்றும், அது போன்ற அடைப்பு பூமி அமைப்பில் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ-9 வரையான ஆவணங்களில் பாதை அமைப்பு இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 690/1ஏ ல் பாதையானது 3 மற்றும் 4 பிரதிவாதிகள் சொத்திற்கு செல்வதற்காக அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி பாதையில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா B பட்டியல் பாதையை நான் பல ஆண்டுகளாக பயன்படுத்தி வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.690 க்கு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள். சர்வே எண்.690 ல் உள்ள கிணற்றில் உள்ள மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி மின் இணைப்பு எந்த வருடம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி கிணற்றை ஒட்டி மின் கம்பம் உள்ளது.

8. அந்த மின் கம்பம் அவர்கள் சொந்தமாக நட்டார்களா என்று எனக்கு தெரியாது. அந்த கம்பத்திலிருந்து எனது சொத்திற்கு மின் இணைப்பு வேண்டும் என

கேட்டுள்ளேன். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் சொந்த செலவில் வாங்கி அமைத்துள்ள மின் கம்பத்திலிருந்து நான் மின் இணைப்பு வாங்க முடியாது என்றால் சரியல்ல. மேற்படி மின் கம்பத்திலிருந்து மேலும் ஒரு மின் கம்பம் என் இடத்தில் நட்டினால் எனக்கு மின் இணைப்பு வழங்கலாம். நான் சொல்வது போல் மின் இணைப்பு வழங்க இயலாது என்றும், தாவா சர்வே எண். 690 பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 15 அடி அகலம் 300 அடி நீளம் உள்ள பாதை தாவா A பட்டியல் சொத்திற்கு வருவதற்கு உள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் பாதை உள்ளதை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை. உண்மையில் அவ்வாறு பாதை இருந்தால் நான் ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், பாதை இல்லாத காரணத்தால் தான் நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு செல்ல தென்புறம் பாதை உள்ளது என்றும், அதை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல

**<u>மறு விசாரணை</u>**

3 மற்றும் 4 பிரதிவாதிகள் இடத்திற்கும் என் இடத்திற்கும் இடையே உள்ள பாதையில் வேலி அமைப்பு இல்லை.

மறு குறுக்கு விசாரணை

3 மற்றும் 4 பிரதிவாதிகள் இடத்திற்கும் என் இடத்திற்கும் இடையே உள்ள பாதையில் வேலி அமைப்பு இல்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**